[illegible]

[illegible]

கொருவர் தானமசெய்யவும், நிமந்திரணம் செய்யஎல்லாவித மும் செய்து வருகிறார்கள்- இவர்கள் கன்னியாதானம் மாத்திரம் செய்யக்கூடாதெனமறுத்தும், சாஸ்திரம் எங்குள்ளதோ அறியேம்- அவ்விதம் எந்தத்தேசத்திலாவது மற்ற எந்தக்கிரந்தத்திலாவது இருக்குமேல் அதைஎடுத்துக் காட்டும் பெரியோர்களுக்கு நாம் செய்யும் வந்தனங்கள் அனேகமாயிருக்கும் இப்பத்திரிகையின் வாயிலாக நான் அதைக்கேழ்க விரும்பிஅவரதுகனத்தைப் பிரார்த்திக்கிறேன். ஸ்மிருதிகளில் ஜாதி யென்கிறபதம் வருணம் யென்கிற பதத்தின் பரியாயமாகவேபிரயோகிக்கப்படுகிறது- ஆதலால் கௌடர் திராவிடர்இவ்விருவரும் வேறுமதங்கொண்ட இருவரும் சம்பந்தித்தல் மாத்திரையில் நிபந்தனைக் கிரந்தங்களில் இடம் கொடுக்கவில்லை யென்று எமதுகருத்து ஐந்து திராவிடர்களுள் ஒவ்வொருவர்க்கும் பாஷைமுதலிய பலவேறுபாடுகள் இருப்பதால் ஒவ்வாதென்றேநம்புகிறோம்- அவ்விதம்ஐந்து கௌடர்களிலும் ஒருவருக்கொருவர் இக்காலத்தில் சோளதேசம் வடதேசம் என்கிற வடமர்கள் பிரிவு பலவிடங்களில் சிதைந்தது- இவ்விதம் மற்றவகுப்புகளிலும் சிலர் ஒன்றுசேர்ந்தேவருகிறார்கள். இவ்விதப்பெயர்களே ஸ்மிருதிகளிற் காணேம். அங்ஙனமிருக்க; இவர்கள் கொள்வனை குடுப்பனையில் தோஷம் ஏது? பிராயச்சித்தவார்த்தைதான் எங்ஙனம் ஒவ்வும்- ஆதலால்ஒரேவேஷம் ஒரே பாஷை ஓரேமதம் கொண்டவருள் கன்னிகளைக் கொடுப்பதும் வாங்குவதும் ஓர்வித தோஷத்திற்கும், இடந்தராதென நமது துணிவு- இதற்குவிரோதமாய் ஸ்மிருதிகளில் உள்ளபிரபல நிஷேதவசனங்களைக் காண்பிக்க நமது சுதேச பாஷாபண்டிதர்களைக்கேட்டுக் கொள்ளுகிறேன்-

ஹாலாசியநாதசாஸ்திரி.

மொழிபெயற்பு.

வேதசாஸ்திரதரங்கிணிபாடசாலை-

ஐயா,—இப்பெயர்கொண்ட பாடசாலை இவ்வூரில் இருப்பதாய் முன்யெழுதினேம் அல்லவா? அப்பாடசாலையை நகரத்துச்செட்டிகளுள் ஒருவரான ரா-ம-சு ருமஞ்செட்டியார் இன்னகரில் ஸ்தாபித்தார். இக்காலத்தில் எங்கும் இங்கிலீஷ்பாஷைபெருக அதையே அரசரும் ஆதரிக்க ஆங்கிலேயர் பிரீதியே ஆனந்தமெனக் கொள்ளத்தான் கஷ்டப்பட்டுத்தேடிய பொருளை இப்பழைய பாஷாபணியின் விஷயம் செலவிடம் முயன்ற இவரைப்போல வேறுமனிதர் அகப்படுவது அரிதிலுமரிது. பிள்ளைகள் தன் குழந்தைகளைப்போல் போஷிக்கிறார்கள் இவ்விடம் வேண்டுவதொன்று இப்பாஷைக்குப் பாக்கியமிருப்பினும் அம்மகானுக்கு இப்பிள்ளைகளைப் பண்டிதராக்க விருப்பமிருந்தாலும், இத்தனிகர் பலவித்துவான்களுடன் கூடி ஆலோசிக்கவேண்டும் பலஏற்பாடுகளை அமைக்கவேண்டும் அதேயப்பாஷையின்பாக்கியம்- அந்தோ! ஓரிடம் தனம்ஓரிடம் தர்மசிந்தை, ஓரிடப் படிப்பு, ஓரிடம் பகுத்தறிவு இவைகள் சேர்வது ஈசன் செயல்- இப்பொழுது இந்தஊருக்கு வந்திருக்கும் ஷைசெட்டியாரவர்கள் வீணாரம்பங்களை விட்டு புதுவழிபிடித்த புலவருடன் கலந்து பாடசாலையை விருத்திக்குக் கொண்டுவரும்படி அவருக்குப் பரமேசுவான் அருள்புரிவாராக. கு-ஸ்ரீ

𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌵𑌿𑌦𑍍𑌯𑌾.

ப்ரம்மவித்தியா பத்திரிகை

பிரதி இங்கிலீஷ்மீ ௰௫-உ சிதம்பரத்திற் பிரசுரம் செய்யப்படும்.

புத்தகம் - ௧.] ௧௮௮௬ - வரு நவம்பர்மீ ௰௫ - உ. [இலக்கம் - ௬

[illegible]

ப்ரம்ம வித்தியா.

ஸம்ஸ்கிருதபாஷை [தொடர்ச்சி]

புராணம்.

ஐயா,—கவனியுங்கள்!

இப்புராணங்கள் பதினெண்வகைப்படும். இவற்றுள் ஒவ்வொரு புராணத்திலும் ஒவ்வொரு தேவதைகளின் பெருமையும், மற்றைய கருமங்களின் பிரயோஜனமுமே சொல்லப்படுவன. இவை ஒன்றுக்கொன்று மாறுபடுவதால் விரோதமின்றி இவைகளைப் பொருட்படுத்துமாறு, இப்புராணங்களை யருளிச்செய்த வேதவியாசமுனிராஜனே ஓரிடத்து [அதாவது மச்சபுராணத்தில்] புராணங்களைப் பகுத்திருக்கின்றார். அவரது திருவாக்கு “சங்கீர்ணம், சாத்துவிகம், இராஜதம், தாமதம், எனக் கற்பங்கள் நான்கு வகைப்படும். அவை பிரமதேவனுக்கு ஒவ்வோர் தினங்களெனப்படும். எந்தெந்தக் கற்பத்தில் எந்தெந்தப் புராணங்கள் சொல்லப்பட்டதோ அத்தந்தப்புராணங்களின் மகாத்மியம் அந்தந்தக் கற்பம்போன்ற [அதாவது சாத்துவிகராயும், ராஜதராயும், தாமதராயுமுள்ள] பிரமதேவராலியற்றப்பட்டன. அவற்றுள், சாத்துவிக கற்பத்தில் விஷ்ணுபுராணம் சொல்லப்பட்டது. தாமதகற்பத்தில் அக்கினி புராணமும், சிவபுராணமும் சொல்லப்பட்டன. பிரமனைப் பற்றிய புராணம் இராசதகற்பத்திற் சொல்லப்பட்டது. சரஸ்வதியையும், பிதிர்தேவதைகளையும்பற்றிய புராணங்கள் சங்கீரண கற்பங்களில் சொல்லப்பட்டது. சாத்துவிக கற்பங்களிற்றான் யோகசித்திகொண்டு பெரியோர் முத்திபெறுவார்,, என்றிருக்கின்றது. மச்சபுராணத்திலும், காருடபுராணத்திலும் இவைகளைப்போன்ற வசனங்கள் உண்டு- ஆதலால், சாத்துவிக கற்பத்தில் சத்துவ குணத்துடன் கூடிய பிரமதேவனால் இயற்றப்பட்டதும், வேதங்களுக்கு அர்த்தம் சொல்லவேண்டிய வழியில் முன்னிற்பதுமாய விஷ்ணுபுராணங்கள் பிரமாணங்களில் மிகச் சிறந்தனவென்பதே அதனுட்கருத்து. மற்ற புராணங்களும் பிரமதேவனே செய்தபுராணங்களாதலால், அவையும் இந்த விஷ்ணுபுராணத்துடன் விரோதப்படாதவிடத்தில் பிரமாணமாகவே ஒப்புக்கொள்ளப்படும். ஏனெனில், அவ்விஷ்ணுபுராணங்களைச் செய்யும்பொழுது அப்பிரமதேவன் சத்

[illegible]

துவகுணத்தோடு, அதாவது மெய்யறிவுடன் கூடியிருந்தமையால் அதுவே சிறந்த பிரமாணமெனவும், இராஜதராய் இருந்தகாலத்தில் எழுதப்பட்டுள்ளன மிகவும் பெருமைபொருந்திய புராணங்களானாலும், அவைகள் சாத்துவிக புராணங்களுக்கடுத்த பிரமாணங்கள் எனவும், தாமதரா யெழுந்தருளிய காலத்துப் பிறந்த புராணங்கள் மேற்கூறிய இருவகைப் புராணங்களுடன் விரோதியாதவிடத்துப் பிரமாணங்கள் எனவு . கூறி, பிறகு அவற்றுள் நாம் அப்பிரமாணமெனக் கொள்ளும் சில பாகங்களும் முத்திக்கு நேர்வழியான பரமைகாந்த தருமத்தை விரும்பும் சிலரை நோக்கியேயல்லது மற்றவர் விஷயத்தில் ஒவ்வொரு புராணங்களும் அவரவர் கொள்கைகளையும், அவரவர்கள் கொண்டாடும் வழிகளையும் புகழும் வழி பிரமாணமாய்க் கொள்வாரேல், அதுவழி ஒவ்வொரு தேவர்களை வழிபட்டு மற்றவரை நிந்தியாது காலஞ்சென்றால் அநேக ஜென்மங்களில் மேலான பதவியைக் கிரமமாயடைந்து, பிறகு ஸ்ரீ விஷ்ணுபுராணங்களில் கூறிய உத்தம தர்மத்தைக் கைப்பற்றி பரமாத்மாவாகிய ஸ்ரீ நாராயணனது திருவருளால் ஸ்ரீவைகுண்டம் சேர்ந்து, அவரது பேரானந்தக்கடலில் மூழ்கி நிற்பார். ஆதலால், ஒரு சமயம் வேதங்களை அர்த்தம்செய்ய நாம் முயற்சிசெய்தால் இவ்விஷ்ணுபுராணங்களைக்கொண்டே உண்மையான சங்கதி வெளியிடவேண்டியது அவசியம். அதுகொண்டே சில ஸ்மிருதிகளில் "இராஜதம், தாமதம், என்கிற புராணங்களைத் தள்ளவேண்டும்,, என்று காணப்படுகிறதுமன்றியில், இவ்விஷ்ணுபுராணங்களை எல்லா மதஸ்தரும் ஒப்பினர்களென்பதற்கும், மற்ற புராணங்கள் இங்ஙனமில்லையென்பதற்கும் சாட்சியாதெனில், நாம் முன்கூறிய விஷ்ணுபுராணங்களின் வசனங்களை ஒவ்வோரிடத்து எல்லா பாஷியகாரரும் உதகரித்தும், மற்ற வசனங்களை உதகரிக்காமல் விட்டதுமே. அதுகொண்டு புராணங்களை மூவகைப்பட்டு உத்தம மத்திம அதமம் என்கிறபடி பேசம் கண்டோம். இவற்றுள் ஒன்றுக்கொன்று விரோதமிருப்பின், அவைகளை நாம் கவனிக்க அவசியமில்லை உத்தமமான புராணங்களோ தாம் எல்லாம் ஒரேவழிநின்று, பரமாத்மாவின் ஸ்வரூபத்தை விளக்குகின்றனவாதலால், அவைகள் முக்கியப்பிரமாணங்களென்பதிற் சிறிதேனும் சம்சயமில்லை என்பது. மற்றும் சிலர் ஸ்காந்தம் என்கிற புராணத்தில் ஒரு பாகமாகிய சங்கரசங்கிதைத் தொடக்கத்தில் "[illegible]" என்கிற வசனத்தைக் கொண்டும், சிவபுராணங்கள் அநேகமாய் தத்துவங்கள் நிரம்பியதும், அநேக கதைகளுடன் கூடிய விஷ்ணுபுராணங்களினும் அதிக கிரந்தசங்கியை பெற்றதும், வேதங்களின் பொருளை நேரே யெடுத்துரைப்பதுமாதலால் அப்புராணங்களே பிரமாணங்களிற் சிறந்தனவென்றும் கூறி, மற்றப் புராணங்கள் அத்துடன் விரோதிக்காதவிடத்தில் பிரமாணங்களென்றும் சித்தாந்தப்படுத்திக்கொண்டு, அவ்வகை சித்தாந்தத்தை யனுசரித்த சில சைவநூற்களைக் கையாடி வருகிறார்கள். அவற்றுள், முதல்வாதியின் துராக்ஷேபங்கள் அநேகமாய் உபவது வாதியால் கண்டிக்கப்பட்டபோதிலும் அவர்கள் கேட்ட கேள்வியில் பதில் சொல்லப்படாத சில சங்திகள்மாத்திரம் இவ்விட மெடுத்துரைப்பாம்.

முக்கியமாய் அவர் கேழ்வியில் புராணங்களில் கதைகள் அதாவது அநேக தேவர்கள், அரசர்கள் முதலியவர் சரித்திரங்

[illegible]

கள் ஒன்றுக்கொன்று முழுவதும் மாறாய்க் காணப்படுவது முதல் ஆக்ஷேபமாய் நின்றது. அது இவ்வித சமாதானத்தால் விலக்கத்தக்கது. எவ்விதமென்றால், இப்புராணங்களெல்லாவற்றிலும் ஒரேகாலத்துச் சரித்திரங்களே சொலலப்படவில்லை. தமது யோகபலத்தினால் முக்காலத்துப் பெருமையையும், நிலைமையையும் கண்டறிந்த முனிவர்களால் அநேக கற்பங்களில் நடந்த சங்கதிகள் வெளியிடப்பட்டனவாதலால், அவைகளில் வேறுகாலத்துச்சரித்திரங்களுக்கும் மற்றதுக்கும் விரோதம் ஏது? முற்கற்பத்தில் நடந்தேறியபடியே பின்னும் இருக்கவேண்டியது அவசியமன்றே. மற்றும் சில கதைகள் எவ்விதமும் விதிவிலக்குகளில் ஜனங்கள் மனம் பகியக் கற்பிதமாயும் உண்டாதலால் நாம் புராணங்களுள் அவசியம் கவனிக்கத்தக்கது தத்துவம் ஒன்றேயென்று துணியவேண்டியது. இதுவிஷயம் மச்சபுராணத்தில் "கற்பந்தோறும் மகான்களான ரிஷிகள், ரிஷிபுத்திரர்கள், ஸ்ரீநாராயணர் இவர்கள் விரித்தார்கள்,, என்றுள்ளது பார்க்கலாம். இப்புராணங்களின் கதைகள் வெவ்வேறு கற்பத்தில் நடந்தது என்பது அநேகபுராணங்களில் ஒவ்வொரு புராணம் தொடங்கும்பொழுதெல்லாம் ஒவ்வொரு கற்பக் கதையைச் சொல்வதாயெழுதியிருப்பதாய் நன்றாய் விளங்கும். ஆனால், புராணங்களிற் சொல்லிய சங்கதிகளெல்லாம் எவ்விதத்திலும் மனிதர் தத்துவநிலைமை யறியக் கருவிகளேயொழிய மற்றொன்றுமில்லை. அவைகளிற் சிறிதேனும் தத்துவபாகங்களி லாராயுங்கால் விரோதமிராது. பூகோளம் ககோளங்களி லெழுதியிருப்பதும் ஆலோசிக்குமிடத்துச் சரியாகவே தோன்றும். எவ்வாறென்றால், பூகோளத்தில் அவர் பலவிஷயங்கள் எழுதியது அல்பராஜிய மதாந்தர்களான சிலருக்கு எவ்விதமும் மதங்குறையவேண்டி, உள்ளதை லக்ஷம்பங்காய்ப் பெருக்கிச் சொன்னதென்பது புராணங்களிற்றானே வெளியாகுமேனும், இவர்கள் கொண்டதெல்லாம் எவ்விதத்திலும் பூகோளவிஷயத்தை விளக்கவேண்டுமென்கிற எண்ணங்கொண்டல்ல. எவ்விதமாவது இப்பெரிய உலகங்களைப் படைத்துக் காக்கும் பரமேசுவரனுடைய பெருமையை விளக்குவதே அவைகளின் முக்கியகொள்கை. சிலவிடங்களில் பூகோளத்திற் பெயர்கள் மாறியிருப்பதும், சிலவிடம் ஜலமாய்க் காணப்படுமிடத்து நிலமாயும், நிலமாயுள்ள விடத்து ஜலமாயும் சொல்வதும் காலஞ்சென்றமையால் அநேகம் சரியேயாகும். இவ்வுலகத்தில் கொஞ்சக்காலத்திற்கு முன் சமுத்திரங்களில் இல்லாத தீபங்களுண்டாவதும், உள்ளது மறைந்துபோவதும் நாம் கண்டதன்றே! இவ்விதம் சொற்பகாலத்திற்குள்ளே இவ்வளவு வேறுபாடாயின், அநேக கற்பகாலங்கள் சென்ற சங்கதி எவ்விதமொத்துவரும்? ஆகையால், புத்திமான்கள் மேது புராணங்களில் சாரமான வேதார்த்தங்களை மாத்திரம் கவனிக்கவேண்டியது. மேலும், எவ்விதம் உலகத்தில் ஓர் சிநேகிதன் தன் சிநேகிதனுக்கு ஒரு விஷயத்தைக் கற்பிக்கக் கருதி, ஏதோ ஒரு கதை என்கிற காரணத்தால் அத் தத்துவத்தை விளக்குவானோ அவ்விதம் புராணங்கள் வேதார்த்தங்களான விதி விலககுகளை எவ்விதத்திலும் எளிதில் ஜனங்களறியும்படி கதைகளை வழியாகக் கொண்டது. இவற்றுள் சில நிஜமான சரித்திரங்களும் உண்டு. சில கற்பனைகளும் உண்டு. ஆகலால், பெரியோர்கள் சிநேகிதனைப்போன்றது புராணங்கள் என்று பலவிடங்களிற் சொல்லுகின்றனர். அதுகொண்டே வேதம் பிரபு போன்றதெனவும், புராணங்

[illegible]

ன் மித்திரன்போன்றதெனவும், காவியங்கள் மனைவிகளைப்போன்றதெனவும் காவிய விலக்கணகாரர் பலவாறு வழங்குவதும் என்க. ஆகையால், புராணங்கள் அப்பிரமாணமெனச் சொல்வது முற்றிலும் சரியல்ல. நமது பெரியோர்கள் வேதங்களைக்கொண்டே பொருளறியவேண்டியதென்று சொன்ன வேதத்திலுள்ள விஷயங்களே மற்ற எல்லாப் பிரமாணநூற்களிலுமுள்ளவையாதலால், அதின் பெருமை விரித்தபடியேயொழிய வேறில்லை. அதுகொண்டே ஒவ்வொருகருமங்களை யெடுத்துரைக்குமிடங்களில் சில புகழ்மொழிகளுள்ளதும், நம்மவர்க்கு அக்கர்மங்களில் விசேஷப் பற்றுண்டாவதற்கே வேறில்லை. மற்றைய கருமங்களை நிந்திப்பதும், வேறு விஷயம் வேண்டாமெனக் கருதியல்ல. பிறகு "தூஷிக்கும் வார்த்தை மற்றதை தூஷிக்கவெழுந்ததல்ல. புகழவேண்டிய வஸ்துவைப் புகழவெழுந்ததே,, என்கிற நியாயத்தால், அவ்வக்கருமங்களைப் புகழவெழுந்தனவேயன்றி வேறில்லை. ஆதலால், மற்றெவ்விதமான அப்பிரமாண புத்தியும் அதிலுண்டாவதற்குக் காரணமில்லை.

இரண்டாவது வகுப்பு வாதிகள் கூறியதன் சிலபாகம் எல்லோருமொப்பத்தக்கதே. எவையெனில், புராணங்களுக்குள் ஒன்றுக்கொன்று விரோதமின்றிப் பொருள்படுத்த வேண்டும். அப்புராணங்களை முதலிற் பிரமதேவன் வெளியிட்டானென்பதும், மற்றவையோ முற்றிலும் அவர் கூறியவழியல்ல. நாம் முற்கூறிய சாத்துவிக கற்பத்தில் விஷ்ணுபுராணம் சொல்லப்பட்டது. ஆதலால், அது சிறந்ததென்பதும், சைவபுராணங்கள் ௧0. அவையே சாத்துவிகங்களென்பதும். அப்புராணங்களை யெவ்விதத்திலும் புகழவேண்டியேயொழிய வேறில்லை. இல்லாவிடில் ஒன்றுக்கொன்று விரோதப்பட்டு முற்றிலும் அப்பிரமாணங்களாய் முடியும். அப்படியிருப்பது சர்வஞ்ஞனா வாதநாராயணமுனிவர் வசனங்களாய அருமைப்புராணங்களுக்கழகோ? இல்லையே! இப்புராணங்கள் முன்பு பெரியதாய் அநேககோடி கிரந்தங்களாய் உள்ளதைக்கண்டு, லோகோபகாரமாய் அதைச் சுருக்கிவைத்த அம்மகான் அப்பிரமாணங்களையும் எடுத்துச் சுருக்கி வைப்பாரேல், அவருக்குத் தம் வாக்கியத்தை நம்பிய ஜனங்களைச் கெடுக்கும்படியான ஓர் துஷ்ட எண்ணிக்கையாவது, அல்லது பகுத்தறிவில்லாமையாவது கற்பிக்கவேண்டி வரும். அப்பொழுது அப் பரமபுருஷனுடைய வாக்கியமான பிரமசூத்திரங்களை மூலமாய்க்கொண்ட நமது ஒவ்வொரு மதவாதிகளும் வருத்தமடைவாரல்லவா? இவ்வாதிகளும் அவர்களுளொருவராதலால், இவர்தான் அவ்விதம் சொல்ல எவ்விதம் துணிவார். மேலும், அவ்வாதராயணமுனிவர் பதினெண் புராணங்களையும் நன்றுயெழுதியும், அவற்றின் பொருட்களை இக்காலத்தவர் நன்றாயறிவது மிகக் கடினமென வெண்ணங்கொண்டு, மகாபாரதமென்கிற இதிகாசரத்தினத்தை யியற்றினாரென்பது எல்லோருமறிந்த விஷயமே. அம்மகாபாரதத்திலும் இப்புராணங்களுட் கூறிய விஷயங்கள் இருப்பதைப்பற்றி, நாம் இனிமேல் அம்மகாபாரதத்தினைக் குறித்து எழுதப்படுமிடத்து விரிவாய்க் காணலாம். இவ்வாதிகள் கொண்டபடி இப்புராணங்களிற் சில அப்பிரமாணங்களானால், எல்லாப் புராணங்களைப் படிப்பதும், பூஜிப்பதும், தானஞ்செய்வதும் புண்ணியமெனக் கூறிய வசனங்களின் கருத்துகள் எவ்விதம் முடியுமோ அறியோம். அவ்விடத்து இவ்

[illegible]

வாதிகள் கொண்டபடி சில புராணங்கள் அப்பிரமாணங்களாயின், அப்புராணங்கள் உலோகாயதமுதலிய பற்பல வேதத்திற்குப் புறம்பான நூற்களைப்போல், நமது மதஸ்தர்கள் [அதாவது வைதிகர்கள்] முற்றிலும் வெறுக்கத்தக்கதாயல்லவா இருக்கும். மேலும், "இதிகாசங்களும், புராணங்களும் ஐந்தாம் வேதம் போன்றது,, எனக்கூறிய சாந்தோக்யோபநிஷத்திற்கும் இவர் சொல்லும்வழி கொண்டால் பொருள் கெடுமல்லவா? மேலும், இப்புராணங்களுட் சில புராணங்கள் சாத்துவிகராய பிரமதேவன் கூறியதும், சில இராசதனாய அவர் எடுத்துரைத்ததும், சில தாமதபிரமனால் வெளியிடப்பட்டன வென்கிறபடியும் இவர் கொள்வது மூலமில்லாத கோட்பாடே. இக்கோட்பாட்டுக்கேற்ப மற்றவையும் கற்பிக்கவேண்டி வருகின்றது. ஆனால், நாம் முற்கூறிய மச்சபுராணத்தில் கற்பங்களை நால்வகைப்படுத்திய பிறகு "யஸ்மிந் கல்பே து யத்ப்ரோக்தம் புராணம் ப்ரஹ்மணா புரா தஸ்ய தஸ்ய து மாஹாத்ம்யம் தத்ஸ்வரூபேண வர்ண்யதே।" என்கிற வசனத்தால் 'எந்தக் கற்பத்தில் பிரமதேவன் எந்தவகைப் புராணத்தை வெளியிட்டனரோ அந்தந்தப்புராணத்திலுள்ள சங்கதிகளை, அந்தந்தக் கற்பமொத்த ரூபமுள்ளவராயிருந்தே வெளியிடுகிறார்' என்று பொருள் புலப்படுவதாலும், "அக்நேஶ்ஶிவஸ்ய மாஹாத்ம்யம் தாமஸேஷு ப்ரகீர்த்திதம்" என்று தொடங்கிய வசனங்களால் 'அக்கினி, சிவன் இவர்களைக் குறித்த புராணங்கள் தாமஸகற்பங்களிற் சொல்லப்பட்டன,வென விளங்குதலாலும், அந்தத் தாமஸகற்ப புராணஞ் செய்யுங்கால் தாமதராயிருக்கவேண்டிய தவசியமென்பது முற்கூறிய வசனத்திலுள்ள 'தத்ஸ்வரூபேண' என்பதால் வெளியாவதாலும் அவ்விதம் சொன்னோமெனில், இந்த வசனத்திற்கு இவ்விதம் பொருள் கூறுவதில் முற்கூறியபடி அநேக தோஷங்கள் காணப்படுவனவாதலால், அந்த வசனத்திற்குப் பொருள் நாம் எழுதும்வழி இருப்பின் இவ்வித பெரும் புராணநூல் நிலைபெறக்கூடும். வேறுவழி பொருள்படுத்தி மற்ற வசனங்களோடு விரோதிக்காதவழி கொள்ளல் உசிதமாதலால், மற்ற வசனங்களுடன் விரோதம் வாராதவழி அதின் பொருள் வருமாறு காண்க. "யஸ்மிந் கல்பே - எக்கற்பத்தில் - யத் புராணம் எந்தப் புராணம் - ப்ரஹ்மணா - பிரமதேவனால் - புரா ப்ரோக்தம் - முன் சொல்லப்பட்டதோ - தஸ்ய தஸ்ய - அந்தந்தக் கற்பங்களினுடைய - மாஹாத்ம்யம் - மான்மியம் [காலத்திற்கு மான்மியம் என்பது அக்காலத்துள்ள வஸ்துக்களின் பெருமையைப் பொறுத்ததாதலால், அப்பதம் இவ்விடம் அக்காலத்துவஸ்துக்களின் சரித்திரமெனப்பொருள்படும்] அதாவது சரித்திரம் - தத்ஸ்வரூபேண - அப்புராண சொரூபத்தால் [அதாவது அப்புராணத்தால்] வர்ண்யதே - சொல்லப்படுகிறது. இவ்வித அருத்தங்கொண்டால் ஒவ்வொரு புராணம் ஒவ்வொரு கற்ப சரித்திரங் கூறியதாதலால், வேறு கற்பக்கதைகளின் சம்பந்தம் அவற்றுட் சிறிதேனுமில்லையென்பது விளங்கும். அதுகொண்டு கதைகள் வேறுபாட்டால் தோன்றிய அப்பிரமாணச்சங்கையென்கிற குற்றம் விலகியது முதற்பயனாகும். புராணங்கள் வெவ்வேறு கற்பக் கதைகளைச் சொல்லும் புஸ்தகங்களென்று தீர்மானமானபடியால், ஒன்றுக்கொன்று

[illegible]

[illegible]

விரோதமென்பது சிறிதுமில்லை. பிறகு கற்பங்கள் நான்கு வேறுபாடுகளுடையனவாதலால், எந்தக் கற்பங்களில் எந்தப்புராணங்கள் சொல்லப்பட்டனவென ஆசங்கை தோன்றுமெனக்கருதி மறுபடி கூறியது "ஙமெஸ்ரிவஸ..." என்று தொடங்கிய வசனங்கள். அவற்றின் பொருள் முற்கூறியபடி அக்கினி, சிவன் முதலியோருடைய சரித்திரங்கள் தாமதம், இராசதம் முதலிய கற்பங்களிற் கூறப்பட்டுள்ளன வென்பதே. இவ்விதமாக இவ் வசனங்களுக்குப் பொருள் கொண்டால் 'எக்கற்பத்தில் எப்புராணம் சொல்லப்பட்டதோ' என்று முன் வாக்கியத்தில் அடங்கிய 'எது' என்கிற இரண்டு சொற்களுடைய பொருளான 'கற்ப புராணங்கள் அதின் மான்மியம் அதின்சொருபத்தால், என்று இரண்டாம் வாக்கியத்திலுள்ள 'அது' என்கிற இரண்டு சொற்களாலும் முறையே தழுவப்படுதலால் இலக்கணக்குற்றம் விலகியது. அநேக புராணவசனங்களுடன் இது விரோதிக்காதுபற்றி மற்ற வசனங்களும் இதுவும் ஒற்றுமையடைந்தது. ஆதலால், அவற்றிலும் அப்பிரமாணமென்கிற இழிவு சிறிதேனுங்கிடையாது. எல்லாம் பிரமாணங்களேயாகும். இவ்விதம் சொல்லாமற் பலவாக்கியங்களுக்கு அப்பிரமாணத்தன்மை விளக்கும் வேறுவழி எவ்விதம் பொருந்தும்? இங்ஙனங் கூறியபடி புராணங்கள் அவ்வக் கற்ப சங்கதிகளைச் சொல்லும் புஸ்தகங்கள் என வெளியானபடியால், மும்மூர்த்திகளில் எந்தக் கற்பத்தில் எந்த மூர்த்தி முதன்மை பெற்றதோ அதைப்பற்றியே புராணங்களும் அவ்வம்மூர்த்திகளின் மகிமையை ஆங்காங்கு விரிக்குமென விரோதம் சிறிதுமில்லை. எப்புராணங்களிலும் பரமேஸ்வரனென பரமாத்மாவின் மகிமை சொல்லப்பட்டுவருவதிற் சிறிதும் சங்கையில்லை. அப்பரமூர்த்தியின் அம்சமான பிரமன், விஷ்ணு, உருத்திரன் ஆகிய மும்மூர்த்திகளில் ஒவ்வொரு கற்பத்தில் ஒவ்வொருவர் மகிமை பெருக்கிச் சொல்லப்படுவதாலும் சிறிதும் விரோதமில்லை. இவ்விதமே மச்சபுராணத்திலும் "ஓரிடம் பிரமன், ஓரிடம் விஷ்ணு, ஓரிடம் ருத்திரன் புகழப்படுவான். இதுகண்டு அம்மூவர்க்கும் ஏற்றங்கிடையாது; தாழ்ச்சியுங் கிடையாது. அவ்வக்கற்பக் கதைகளைக்கண்டு மகாரிஷிகள் அவ்விதம் எழுதினார்கள். இதுவிஷயத்தில் அறிஞர் மோகங்கொள்ளார்,, என்று வசனம் உண்டு. இன்னும் வரும்.

ஆத்மாவும், சரீரமும்.

இது விஷயத்தை முன் இரண்டு பத்திரிகைகளில் விரிவாக எழுதிவந்தோம். அதைக் கண்ட ஒருவர் சென்னையிற் பிரசுரமாகும் "தத்துவவிசேனி,, என்கிற பத்திரிகையில், அவ்விஷயத்திற் சில குற்றங்களெழுதுவதாய்க் கங்கணம்பூண்டு இரண்டு பத்திரிகைகளாய் எழுதிவருகின்றார். அப்பத்திரிகை 5- வது புத்தகம் 46- 47- வது சஞ்சிகைகளில் யாம் அவ்விஷயத்தைப்பார்த்து அகமகிழ்ந்து, அதற்குப் பதிலெழுதுமாறு நமது பத்திரிகையிற் சிலவிடங்களைச் செலவழிக்க உத்தேசித்தோம். இதுவிஷயத்தில தத்துவவிவேசினியில் எழுதும் நமது நண்பருக்கும், எவ்விதமேனும் சொல்லுக்குச்சொல்லாய் ஏதேனும் சொல்லி எந்தவகையாவது நாத்திகத்தை நிலைநாட்டவேண்டுமென்கிற அபிப்பிராயம்போல், எமக்கும் அவர் வா

[illegible]

ர்த்தையை எவ்விதத்தினுங் கண்டிக்கவேண்டியது அவசியமென்கிற துராக்கிரகமில்லை. ஆனால், நமதுள்ளத்திற்றோன்றும் நியாயங்களை நாம் எடுத்துரைப்போமாயின் இவ்விருபத்திரிகைகளையும் படிப்பவர் தாரதம்மியமறிவாரல்லவா? மேலும், நமது வார்த்தைகளைக் கண்டிக்கவெழுந்த நமது நண்பர் நாம் அநேகமாய்ப் பெரியோர்களிடம் பன்னிப்பன்னிப்படித்த தருக்கநூற்களிற் காணாத அருமையானதும், உலகத்தில் தற்காலம் 12- 13- வருஷங்களாய் அத் தருக்கநூலை யாராய்ந்த ஒவ்வொரு வித்துவான்களும் வியக்கத்தக்கதும், பிரமதர்க்கமென வழங்குங் கிரந்தத்திலுங் கேட்டறியாத வியாப்திதோஷ முதலிய தோஷங்கள் நிறைந்ததுமாய ஓர் அரிய தருக்கநூலைக்கற்று அதின் சகாயத்தாலும், தமது புத்திவலிமை கொண்டும், பிறர்க்குக் கிடைக்காத நாவாளாலும் உலகத்திலுள்ள மதவாதிகளெல்லாரையும் தாமே ஜயித்து மகிழ்ந்து டளா பளா என்று பரிகசித்து வரும் நவீன தார்க்கிக சிகாமணியாய் வெளியில் வந்திருக்க அவருடன் யாம் எதிர்த்துப்பேசுவதுசிதமன்றேனும், லோகோபகாரமாய் மற்றவர் வார்த்தைகளுக்கும் அவர் சிறிது விடைகொடுப்பாரென்று நம்பிப் பின்வரும் விஷயங்களை எழுத ஆரம்பித்தோம். இதுவிஷயத்தில் நாம் ஆத்திகரென்றும், அவரங்ஙனமல்லரென்றும், எவ்விதமும் ஆத்திகர்கொண்ட கொள்கை நாத்திகருக்குப் பொருந்ாதெனவும் எண்ணியோ அவர்கள் அவ்வியாப்திதோஷம் என்று கூறும் இலக்கணக் குற்றத்தைத் தாம் வியாப்திதோஷம் என விவகரிக்கின்றார். இது நிற்க. சங்கதியைக் கவனிப்போம்.

ஐயா,—நமது நண்பர் ஒரு தேசமாவது நாத்திகர் நிறைந்துள்ளது இல்லையென்று எழுதியதால் நாத்திகருக்கு வருங்குறை யாது என்று வினவினர். அதற்கு மறுமொழி. தேசங்கள் க்ஷேமமடைவதும் மதங்களின்பிரயோசனங்களில் ஒன்றென்றும், அதனால் ஒற்றுமை சித்திக்குமென்றும் நாம் முதற்பத்திரிகையிற்றானே விரித்தோம். ஆகையால், இந்நாத்திகம் ஒருதேசம் நிறைந்தால் ஆங்கு உலக க்ஷேமங் குறையுமென்பது கருத்தாம். நமது சிநேகிதரோ 3- வது 4-வது பத்திரிகைகளில், மூளையென்பது மனத்தின் இடமேயொழிய அறியுந்தன்மையுள்ளதல்லவென்று நாம் எழுதியதைப் படியாதும், அதிற் கண்ட யுக்திக்குக் கண்டனம் செய்யாதும் "மூளைக்கே அறியுந்தன்மை யுண்டென்று பிறர் கூறியதை இவர் மறுத்தாராம். இவர் மறுப்பு இவர்க்கே வியப்பாயிருக்கிறதுபோலும். அதன் வேறாய் மனதின் தத்துவத்தையும் விரித்தாராம். பின்னர் அதற்கு நாதனான ஜீவனுடைய தத்துவத்தை விரிக்கப்போகின்றனராம். கெட்டிக்காரன் புளுகு எட்டு நாளையில் வெளிப்படும்,, என்று பரிகாசம் என்கிற கொடிய நாவாளான ஆயுதத்தைக்கொண்டு நமது நண்பர் நம்மை ஜயித்ததுபோல் மற்றவரை ஜயிப்பாரோ ஏதோ அறியோம்! இவ்விதம் ஜயிப்பது மிகச் சுலபமே! மேலும், நாத்திகத்தைக் கண்டித்ததாகச் சாஸ்திரிகள் நமது தேசத்தில் எழுதியது ஏது என வினவினர். "கண்டனகண்டகாத்தியம்,, என்கிற ஸ்ரீஹரிஷபண்டிதரவர்களெழுதிய நூன்மணி, "நியாயகுசுமாஞ்சலி,, என்கிற உதையனாசாரியரியற்றிய சாஸ்திரம், "ஈசுராநுமானசிந்தாமணி,, கங்கேசோபாத்தியரருளிய பெருநூல், "வாசஸ்பத்தியம்,, வாசஸ்பதிமிச்சிரரது திருவாக்கு, இவைகளைத் தமக்கு

[illegible]

ஸம்ஸ்கிருதபாஷையிலும், பிராமணர்களிடத்திலும் உள்ளது வேஷத்தைவிட்டுத் தெரிந்துகொள்வாரேல், ஆத்திகம் ஆபாசமென்றும், நாத்திகம் சீர்திருத்தம்பெற்றதென்றும் சொல்லத்துணியார். மேலும், பிறந்த குழந்தைகளுக்கும் ஜீவனுண்டே மனம் உண்டா என்றார். இவ்விடம் மனம் இல்லையென்பது இவர் எவ்விதம் அறிந்தனரோ. மனம் என்கிற பதத்திற்குப் பொருள் ஏதுகொண்டனரோ தெரியவில்லை. இவ்வான்மா சரீரவுறுப்புக்களின் வேருமானால் சரீரத்தின் புறத்தே இருக்கும் என்றார். வீட்டின் உறுப்புக்களிற் சேராத மனிதன் வீட்டிலிருபபதும், அவ்வீட்டில் ஓர்பாகம் கெட்டால் அவ்வீட்டைவிட்டு மனிதன் ஓடுவதும் நாம்கண்டோமாதலால், அதைக்கொண்டே இதற்குச் சமாதானம் சொல்லிக்கொள்வதுடன் கூட, அவ்விதமாய விவகாரத்தைக்குறித்து நாம் மேலே எழுதியிருப்பதையும் ஒருவாறு கவனிப்பாரென்று நமது நண்பரைக் கேட்டுக்கொள்ளுகிறேன். ஆத்மா அறிவு என்று முடிந்தபடியால் அது எங்ஙனம் பொருளாகும் என்று கேட்டு, இது இவர் படித்த தருக்கம் என்று தமது முக்கிய நாவாளான பரிகாசாஸ்திரத்தைச் சிறிது பிரயோகித்தார். அவர் தருக்கம் ஒன்றே படித்தாரொழிய ஜீவனது சொரூபத்தைச் சொல்லிய நூற்களைச் சிறிதேனும் படித்திரார்போலும். படித்திருப்பாரேல், அவர் ஜீவனது உருவமாய அறிவு பொருளென்றுவது, குணமென்றுவது ஒருவகை நிச்சயிப்பார்- இத்தார்க்கிகசிகாமணி நாம் எழுதிய விஷயத்தில் ஆத்மாவினிலக்கணம் நன்றாய் விளங்கவில்லையென்றும், இவரைப்போலொத்த நியாயசாஸ்திர ப்ரவீணர் இருந்தவூரிலே யிருந்தவரும் இவ்விதம் சொல்லாரென்றும் எழுதினர். தான் தார்க்கிகரும், தார்க்கிகர்களிருந்தவூரிது மிருந்தவரென்பதும் அவர் எழுதியவழி நன்றாகவிளங்கினும், இத்தார்க்கிகருடைய வாதங்களைப்பற்றிப் பலதடவை நாம் பத்திரிகையிலாவது வாசித்தால், இவர் இவ்வறிவிலக்கணம் இன்னதென்றும், அதற்கும் புறவறிவிற்கும் வேற்றுமை யின்னதென்றும், அந்த விஷயம் முழுவதும் படித்தறிவாரென்று எண்ணினோம். அது தெரிந்துகொள்ளவாவது தமது பொறுமையை சிறிது விநியோகித்து முழுதும் படிக்காது தாம் கற்றுள்ள வியாப்திதோஷம் என்கிற அருஞ்சொல்லை ஒருதடவை பிரயோகித்து, இப்படிப்பட்ட பொருளுள்ள சொற்களுக்கே உலகத்தில் வாதிகள், வாதநூற்கள், கற்றோர், கல்வி, பத்திரிகை எல்லாம் வேண்டியதென்றெண்ணி, அவர் பிரயோகிக்கும் சொற்கள்போன்ற சொற்கள் சிறிதேனுமில்லாத எம்போலிகளுக்கும் இவையெல்லாம் அழகல்லவென்றெண்ணி வாதிகளேன்? வாதநூற்களேன்? அதேன்? இதேன்? என்று பல வேடிக்கைவார்த்தைகளை எழுதியொழிந்தார். பிறகு, "உயிர் என்பது யாது?,, என்று தொடங்கியவிடம் இவர் கூறும் தூஷணங்களாவன. முற்றிலும் அவ்விடத்தைப் பொறுத்துப்படிக்காது உயிருக்கும் ஜீவனுக்குமுள்ள விலக்கணத்தைப்பார்ப்போம் என்று தொடங்கி, "உயிர் என்பது இச்சரீரத்தில் நிறைந்திருக்கும் ஓர்வகை வாயு,, எனகிற இலக்ஷணவாக்கியத்திற்கு உள்ளபடி உயிர் என்பது சரீரத்தில் நிறைந்ததும், வாயுக்களின் பல பகுப்புக்களில் ஓர்வகையிற் சேர்ந்த வாயு எனப்பொருள்கொள்ளாது, சரீரத்தில் இனியும் எத்தனை வாயுக்களுண்டென்றும், உண்டாயின் அதற்கு விவரம் யாதென்றும், மற்றும் ஏதேதோ எழுதியிருக்கிறார். பிராணன் என்கி

[illegible]

[illegible]

ற பெயர் பொதுவும், சிறப்புமாயுள்ளது. கீர்வாணபாஷையில் மிருகம், சாலம் முதலிய பலசொற்கள் அவ்விதம் உண்டென்று எடுத்துக்காட்டக் கருதி, நாம் சரீரத்திலுள்ள 10- வகை வாயுவுக்கும் [அதாவது 10. பெயர்கொண்டு பலவிடம் நிற்கும் வாயுவுக்கு:] அப் பிராணன் என்கிற பெயர் விநியோகித்த விவகாரமுள்ள வாக்கியத்தையெழுதினால், அதிற் சிறிதேனும் சம்பந்தமில்லாத கேள்விகள் பல எழுதினர். அதற்கு 12.அங்குலம் வேகம் என்றால் எவ்வளவு காலத்தில் என்பதும், வெளியிலுள்ள வாயுவுக்கும பேதம் உண்டில்லையென்பதும், அதின் அளவு இன்னதென்றும் நாம் எழுத இங்கெழுந்தோமல்லம். அவ்விஷயம் தான் பலவிடங்களில் வெளிவந்து பிரசங்கிப்பதும்பாலும், மற்றவர் உள்நிற்பதுபோலும் தங்கள் கௌரவம் எழுதி அதுகொண்டே மகிழ்ந்தார். அப்படிச் சமயம் நேருமேல் இவர் கேட்கும் பரீக்ஷைகளை இவர் கொண்ட கருவிகளின்றி வெவ்வேறுவிதமாயே நமது முன்னோரெழுதிய அரியநூற்களால் எடுத்துக்காட்டவல்லவர் அநேகருண்டென்பது இவருக்கும் விளங்கும். இங்கிலீஷ்பாஷையில் ஏற்பட்டிருக்கிற பரிபாஷாநாமங்களுக்கு முன்னோரெழுதிய புஸ்தகங்களில் பெயர்களுண்டில்லையென்பது குறித்துக்கேட்டால் விளங்க மறுமொழிகிடைக்கும். அபானம் வெளிச்சென்றாற் பிராணன் குறையுமாவென்றால், அதனாற் குறைவதும், வெளியிலிருந்து உள்ளேசெல்வதால் அது நிறைவதும் உண்டென்பது யோகநூற்களைக்கொண்டே எளிதில் விளக்கக்கூடும்.

3- வது ஜீவன் அறிவினிடம் என்று சொன்ன விஷயத்தை மாத்திரம் கவனித்தாரேயொழிய, அதன் சொரூபவறிவிற்கும் வெளியறிவிற்கும் நாம் கூறிய பேதத்தைச் சற்றுக்கவனித்தெழுத அவருக்கு அவகாசங்கிடைக்கவில்லைப்போலும்! அகப்பொருளென்கிறவிடம் பொருள் என்கிற பதம்இவர் படித்த தருக்கநூற்களில் உள்ள பதார்த்தம் என்கிற சொல்லுக்கொத்த சொல்லென அறிவாரேல், அகத்தில் காமம், கோபம் முதலிய குணங்களை நான் காமி, நான் கோபி என்றுதொடங்கி அனுபவிப்பதும் கவனித்துப் பிறகு அகப்பொருளில்லையெனக் கேள்வி எடுக்கமாட்டார்.

ஆகையால், மேலே தொடர்ந்து கண்டிக்கப்புகுந்த நமது நண்பர் நம்பால் தயவுசெய்து, வீண் நிந்தாவசனங்களால் அருமையான பத்திரிகையை நிரப்பாது, இனி விஷயங்களைக் கவனித்து நல்லமாதிரியாய் எழுதுவாரென்றும், நாம் எழுதிய விஷயத்தைச்சார்ந்த பாகத்தை மாத்திரம் கவனித்துக் கோபங்கொள்ளாமல்மறுமொழி பகர்வாரென்றும் கேட்டுக்கொள்ளுகிறோம்.

கேழ்வி.

ம-ா-ா- ஸ்ரீ ப்ரம்மவித்தியாபத்திராதிபரவர்கட்கு. வேதாந்தசூத்திரத்திற்கு வியாக்கியானமாகப் பிறந்திருக்கின்ற பாஷியங்களில் எதுமுந்தியது? இன்னதுமுந்தியதென்றால் யாது காரணம்? பிரமாணங்களோடு அறிவிக்க வேண்டுகிறேன்.

உண்மை விரும்பி.

இதற்கு விடை.

இத்தேசத்தில் தற்காலம் வழங்கிவரும் வியாசசூத்திர வி

[illegible]

யாக்கியானங்கள் ரு. அவை, ஸ்ரீ நீலகண்டசிவாசாரியசுவாமிகளது பாஷியம், ஸ்ரீமத்சங்கரபகவத்பாதாசாரியசுவாமிகளது பாஷியம், ஸ்ரீமத் இராமாநுஜாசாரியரது பாஷியம், ஸ்ரீமத் அனந்ததீர்த்தரென வழங்கும் மத்துவாசாரியரது பாஷியம், அவ்விதவல்லபாசாரியரதுபாஷியம் என்பன. இவற்றைத் தவிர்த்து அத்துவிதமதத்தைச் சார்ந்த வேறு உ. பாஷியங்கள் உண்டு. அவை, பாஸ்கரீயம் எனவும், யாதவீயம் எனவும், வழங்கப்படுவது. இவ்விரண்டு பாஷியங்களும் அத்துவிதமதத்தின்வழி யுள்ளது என்று பெரியோர் வழங்குவது. இவ்விரண்டனுட் பாஸ்கரீயமென்பது மாத்திரம் ஒரு பழங்கோசம், மாயூரந்தாலூக்கா திருவாலங்காட்டில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் வேதவேதாந்தாதிவர்த்தனி என்கிற ஸம்ஸ்கிருத புஸ்தகசாலையிற்கண்டதுண்டு. மற்ற யாதவீயம் என்பதோ கதைகளிற் கேட்டோமொழிய வேறில்லை. முற்காலத்துப் பாஷியகாரருட் சிலர் எடுத்தெழுதுவதைக்கண்டு நாம் அறிந்தமட்டில் போதாயனவிருத்தி என்று போதாயனமுனிவரியற்றிய ஒரு விருத்தியுரையும் இருந்தது. அது இப்பொழுது முழுவதுங் கிடைப்பதரிது- இதுநிற்க- தற்காலம் சில வருஷங்களுக்குமுன் பல்லாரிஜில்லாவிற் பிறந்த வீரசைவர்களிலொருவர் ஸோமநாதாராத்தியர் எனப் பெயர்வகித்து, ஸோமநாதீயம் என்று ஒருபாஷியம் செய்திருப்பதாய்த் தெரியவருகிறது இவைகளுள், இதுமுன், இதுபின் என்று நிச்சயிப்பது இருவகை. அதாவது அந்தந்தப்பாஷியகாரர் சரித்திரங்களாலும், அவரெழுதிய நூற்களாலுமே. ஆதலால், நாம் ஆராயும்வழி ஸ்ரீமத் நீலகண்டசிவாசாரியர்பாஷியம் முதலாயிருப்பதாய்த் தெரியவருகிறது. ஏனெனில், இம்மகானுடைய சித்தாந்தம் விசிஷ்டாத்துவிதம்- அதைக்கண்டிக்க அதாவது ஜீவனுக்கும், பிரமத்துக்கும் பேதமில்லையெனத் தாபிக்கவேண்டி, அவரது வார்த்தைகளையே ஸ்ரீமத் சங்கராசாரியசுவாமிகள் எடுத்துரைப்பதாலும், அவர் சரித்திரங்களிலும் முன்னமே சைவபாஷியஞ்செய்த ஸ்ரீநீலகண்டமுனிவரைக் கோசருணத்திற் சந்தித்தாகவிருப்பதாலும், ஸ்ரீமத் அப்பயதீக்ஷிதசுவாமிகளருளிய சிவாத்துவிதநிர்ணயம் என்கிற கிரந்தத்தில் ஸ்ரீநீலகண்டசிவாசாரியர் பாஷியம் முன்னென்றும், பிந்தியது ஸ்ரீமத் ஆசாரியசுவாமிகளது பாஷியம் என்றும் எழுதியிருப்பதாலும் அறிவோம்- இவ்விருபாஷியங்களுக்கும் பின் யாதவீயம் என்கிற பாஷியம் என்பது, ஸ்ரீமத் இராமாநுஜாசாரியர் அந்த யாதவப்பிரகாசரிடத்திற் படித்ததாகவும், பிறகு அவர் ஒருதினம் ஸ்ரீமத் சங்கராசாரியசுவாமிகள் பாஷியத்தி லுள்ள அர்த்தங்களைச் சொல்லக்கேட்டு, அவ்விதம் எழுதுவது உசிதமன்றென்று எண்ணங்கொண்டு பாஷியம் வேறுசெய்து, அப்பாஷியத்தில் ஆசாரியசுவாமிகள் பாஷியத்தையும், யாதவீயம் என்கிற பாஷியத்தையும் கண்டித்ததா யெழுதியிருப்பதுந் தவிர, வேதாந்தாசாரியார் செய்த யதிராஜபத்ததி என்கிற குருஸ்தோத்திரத்தில்தொடங்கும்பொழுதே [illegible]'' என்று சங்கரமதத்தையும், யாதவமதத்தையுங் கண்டித்தவரென்று எழுதியிருப்பதாலும் அவ்விதமே சொல்லவேண்டியது. பலவிடத்திலும் இராமாநுஜபாஷியத்தில் சங்கரபாஷியவாக்கியங்கள் உண்டு. அதன்பின்பு ஸ்ரீமத்ஆனந்ததீர்த்தாசாரியார்பாஷியம் பிறந்

[illegible]

து- அவர் சரித்திரத்திலும் உக- பாஷியங்களைக் கண்டித்ததாக எழுதியிருப்பினும், முக்கியமாய்ச் சங்கரமதத்தை முற்றிலுங் கண்டித்ததாகவும், ஸ்ரீமத் இராமாநுஜாசாரியர் மதத்தை சிலவிடம் மறுத்ததாகவும் எழுதியிருப்பதும், அவர் பாஷியமுமே பிரமாணமாகும், வல்லபாசாரிய பாஷியமோ சமீபகாலத்திற் பிறந்ததென்பது மிக நன்றாய் எல்லோருமறியக்கூடும் அவருடைய மாணாக்கராய பாலசுவாமிகளென்பவர் தென்றிசையில் வந்தகாலத்து அவரிடம் உபதேசம்பெற்ற சீஷர்களின் வாழ்நாட்களிதுவரையுமிருப்பதால் அது போதுமான சாட்சியாயிருக்கும். ஆனால், இவற்றுள் பாஸ்கரீயம் இக்காலத்திற்பிறந்ததெனத் தெரியாமற்போனபோதிலும், அது அத்துவிதபாகத்தைச் சேர்ந்ததாதலாலும், வியாசசூத்திரத்தின் தாற்பரியத்தை உபநிடதங்களைக்கொண்டு விரிக்கவெழுந்தமையாலும், அப்பாஷியத்தில் மற்ற எந்தப்பாஷியகாரர் வசனங்களையுமெடுத்துக்காட்டாததினாலும், நாமிவ்விடமெழுதியபடி முன்பாஷியமான ஸ்ரீநீலகண்டபாஷியத்தில் இவர் வசனங்களேயென்றபிரமிக்கத்தக்க சில வசனங்கள் "பாசுபத்தியாதிகரணம்,, முதலியவிடத்துப் பூர்வாசாரியர்களிங்ஙனம் வியாக்கியானஞ்செயதார்களென்றுகூறியும், அதேபாஷியத்தொடக்கத்தில் "மோக்ஷத்தைக் காட்டும்வழி நின்ற இந்த வியாசசூத்திரம் பூர்வாசாரியர்கள்செய்த உரைகளாற் கலங்கியதுபற்றி ஸ்ரீநீலகண்டர் அககலக்கத்தை விலக்குகிறார்,, என்றிருப்பதாலும், இந்நீலகண்டபாஷியத்திற்கு முன்னுள்ளது இதுவேயென்று துணிதல் ஒவ்வும். அதுகொண்டே "வித்தியாரணியசுவாமிகள்,, வேதபாஷியத்தினும் முந்தியது பாஸ்கரியம் எனவழங்குவதும் காண்க. இப்பாஸ்கராசாரியர் வைஷ்ணவாத்துவிதியாதலால்- அவர் சொன்ன சிலபாகம் ஸ்ரீ இராமாநுஜாசாரியார் எடுத்துக்கொண்டதாய்த் தெரியவருகிறது. ஸ்ரீமத் போதாயனமுனிவர் விருத்தி எல்லாவற்றிற்கும் முன்னுள்ளதே. இது முன் பாஷியங்களெல்லாவற்றிலும் ஆங்காங்கு எடுக்கப்பட்டதாலென்றறிக. அதுகொண்டு நாம் அறிந்தமட்டில் ஸ்ரீபோதாயனவிருத்தி முதல். இரண்டாவது பாஸ்கரீயம். மூன்றாவது ஸ்ரீநீலகண்டபாஷியம். நான்காவது ஸ்ரீமத் சங்கரபகவத்பாதீயம். ஐந்தாவது யாதவீயம். ஆறாவது ஸ்ரீமத் இராமாநுஜீயம். ஏழாவது ஆனந்ததீர்த்தீயம். எட்டாவதுவல்லபீயம். ஒன்பதாவது ஸோமநாதீயம் என்பது-

கடிதங்கள்.

கடிதக்காரர் அபிப்பிராயத்திற்குப் பத்திராதிபர் உத்தரவாதியல்லர்.

குறிப்பு

இந்து- நீர் எழுதிய உலகம் அசத்தா? சத்தா? என்கிறவிஷயத்திற்குச் சமாதானம் வருமுறை பிரசுரிக்கப்படும்.

வடமொழிவிருத்திவிரும்புவோன்- நீர் எழுதியது அதிக விரிவும், சில அகௌரவமான வார்த்தைகளும் உள்ளனவாதலால், போடப்படமாட்டாது-

ஓர் வைணவாத்துவிதி- நீர் உமது பேர் ஊர் உள்ள அந்தரங்க கடிதம் எழுதாதொழிந்தீர்- ஆதலால் உமது கடிதம் இம்முறை பிரசுரிக்கப்படவில்லை-

ணேந ப்ரஸாத்யதே” இதி ஶிவபுராணே வாயவீயஸம்ஹிதாயாம் அநேந வசநேநாபி ப்ராசீநஸ்ஸித்த ஸ்ஸம்பூஜ்யதே. ஸ தஸ்ய விஷ்ணுர்நிவிஷ்டவே த்ஸாஷ்யாஸ்ஸர்வநஸ்ஸர்வ்யம் வேதஸாஷ்யம் ஸாக்ஷம் தே. ஸர்வஸர்வாய ஸர்வேஷ்வசைவதீக்ஷித த்ரைலோக்யஶ்ரேஷ்ட கேவிந்த்ராநந்தாய ஸ்ராணாம் லிங்காம்: பொயாய நம்ரஸ்திஸ்ஸ்ரவணம்: ப்ராவீநா-த த்தத்ஸ்வரூபவேஷ ஸாஷ்ப்ரஷ்ய ப்ரஸாதயதேக்ஷ தஸ்ஸாஸாக்ஷாநந்ஸ்ய தத்விஶேஷம் “க்ஷேளபொயாதீப்ரதி ஸர்வஸ்வீயத: ஸர்வம்। ஶ்ரீருத்ரீயத ஶ்ரீமதீலஷ்வக்ஷம் க்ஷரோதம்। ஶ்ரீருத்ராநந்தஜீயம் வதேதாஸ்யம் வாஷ்ம் ஸம்। ததஸ்ஸோநாயீபம் ஜதிஸாஷ்யக் ஷோதம்:.

இதி

பத்ரிகா:

பத்ரிகாப்ரேஷகாபிப்ராயாணாம் பத்ராயிதா நப்ரதிஸந்தி:

ஸூசநா

ஹிந்து:- ஸவதாஸிவிஷ: “ஜநக- கவஸக- உதஸக.” இதி வர்ஷத்ரிவிதஸ்ய விஷயஸ்ய ஸாயாநம் வரஸ்தாச ப்ரகடயிஷ்யதே-

தீவர்ணாபிப்ராயிகாம்க்ஷீ: ஶ்ரீநாயிவிதம்ஸ திஸ்தத்ர தம் கேஶ்தூளகிகேம்பஜோரம்வி தம் ஸ்ருஜ்யதே க்ஷ்திஸ்வேஷ்வாமைதீ- ஸவாநாயோஸஹி ஸாம்வ த்ரிகாம்நாயிவஸ- ஸ தேரநஸஸாமைஹதஸ்வத்ரிகா யாம்ப்ரகடயிதம்

க்ஷிஸ. ஹிந்து:- வர்த்ரவஸப்ரயா. தஜஸாவஸ்த. ஜக்ம் நாதீவஸவஜநேநாவகாரகம்.

ஜநகக்ஷேத்ரகாம்க்ஷீ. ஶ்ரீநீலிதம் நப்ரகடநீயம்வத்ரி காயாம்யஜத்ரமொஷ்டீஷாத்ர ஸஹ்யத்யாநிஸம்தி பஸநிக காரணாநி-

குதர்க்காசலகுலிஶம்

[பஞ்சாநநீய:]

“ஶ்ருஸாஷ்வேவேநெகொவி வக்ஷ்யஜநஸ்வணஷ்வண:” இதிந்யாயேந. “ஸத்யாகாம்க்ஷீ”. வர்ந: “வேஜநாநக்ஷிந்யாம்- க்ஷஸா நிஸந்ஸயிதரேரேஹ “ஸவஹாயாதிகரோணிஶ்ரவணஸ்யாசத்யாநி ரக்ஷ தரிதம்” இதிவதந். பத்ராயிவணவாஸ்யப்ரயமேஸாக்ஷீ தேளயேந். ஸவதர. தஸ்யவாஸம்ரேத்ர யிதம்காஸ்திஸ।

ஓர் இந்து- புத்திரப்பேறுண்டாதல், அஃதில்லாமை இது விஷயம் சர்வஜனோபகாரமுள்ளதல்ல-

உலகக்ஷேமத்தை உண்மையாய் விரும்புவோன்- நீர் எழுதியது பத்திரிகைக்கு உபயோகமில்லை- தன் மனிதருடன் விவாதம் செய்ய யோக்கியமென நம்புகிறோம்-

குதர்க்காசலகுலிசம்.

60-வது பக்கத்தொடர்ச்சி.

“தட்டிப்பேச ஆளில்லாவிட்டால் தம்பி சண்டப்பிரசண்டன்,, என்பதுபோல் “நன்மைவிரும்பி,, என்பவர் பின்னும் வேலூர் ஜநாநுகூலநியில் விரட்டவந்தார். “கர்ணகடோர வாக்கியங்களை நீக்கி யச்சிட்டோம்,, என்று வேலூர்ப் பத்திராதிபர் குறிப்பிட்டதால் இவர் கொடுமையாய்த் திட்டியதற்கு வேறு சாட்சி தேடவேண்டா- அவர் வாயடங்கச் சில சுருதிகளை இங்கு காட்டுவோம்.

பஸ்ம ஜாபாலத்தில்

லிங்கரூபிணம் ஸாம்பம் ஸம்பூஜ்ய விஜயந்தி. யோகிநஸ்ஸித்தாஸ்ஸம்யக் யஜந்தி, யஜ்ஞேந மாமேவ ஸர்வம் தீக்ஷிதாஸ்ஸாங்கவேதாஸ்ஸர்வோபநிஷதஸ்ஸேதிஹாஸா நமேதாந்யதஹமேவ ஸர்வம் ஸர்வம் மய்யேவ ஸ்திதம் தஸ்மாச்ச்ரேயஸே காஶ்யாம் ந்யஸ்தமநாஸ்ஸம்பூஜ்ய ஸ்ததமஹோராத்ரம் நாநாநநா நாநாநகா நாநாஸ்த்ரபாணயோ நாநாரூபதரா நாநாசிஹ்நிதா ஸ்ஸர்வே விபூதிதாரிணோ ருத்ராக்ஷாபரணா: க்ருதாஞ்ஜலயோ நித்யமபித்யாயந்தி தத்ர பூர்வஸ்யாம் திஶி ப்ரஹ்மா க்ருதாஞ்ஜலிரஹர்நிஶம் மாமுபாஸ்தே, தக்ஷிணஸ்யாம் திஶி விஷ்ணு: க்ருதாஞ்ஜலிஶ்ஶிரஸி உபாஸ்தே, ப்ரதீச்யாமிந்த்ரஸ்ஸப்ரணாமமுபாஸ்தே, உதீச்யாமக்நிரூபீ ருத்ரோ மாமுபாஸ்தே:

என்று பெறப்பட்ட வாக்கியங்களால் இலிங்கவடிவமாகிய என்னை நன்கு பூஜித்து, யோகிகளும் சித்தர்களும் சித்திக்கின்றார்கள். சித்தியையடைகின்றார்கள். தீக்ஷிதர்களும் என்னையே யஜனஞ்செய்கிறார்கள்- சாங்கங்களான வேதங்களும் சர்வோபநிஷத்துகளும் இதிகாசத்துடன் என்னையே துதிக்கின்றன- என்னைத்தவிர வேறேயொரு பதார்த்தமுமில்லை. நானே சகலமுமாயிருக்கின்றேன்- என்னிடத்திலேதானே சகலமுமிருக்கின்றன- அதனால் காசியில் மனக்கட்டுடன் கூடியவரால் இரவும் பகலும் நானே பூஜிக்க வுரியவனாகின்றேன்- அவ்விடத்தில் பயங்கரமான முகங்களுள்ள கணங்கள் நாநாவிதமான நகங்களுள்ளனவும், நாநாவிதமான சஸ்திரங்களைத்தாங்கினவும், நாநாவிதமான ரூபங்களைத்தரித்தனவும், நாநாவிதமான அடையாளங்களைப் பெற்றனவுமாகவிருக்கின்றன- அந்தக்கணங்கள் யாவும் விபூதிதாரணஞ் செய்து கொண்டிருப்பனவும், ருத்திராக்ஷமாலிகாபரணம், பூண்டனவும் அஞ்சலிகூப்பினவுமாகி நித்தியம் அபித்தியானஞ்செய்துகொண்டிருக்கின்றன. அவ்விடத்தில் பூர்வதிக்கில் பிரம்மவானவர் அஞ்சலிசெய்துகொண்டு இரவும் பகலும் என்னையே யுபாசித்துக்கொண்டிருக்கின்

ஶ்ருதிப்ரத்யக்ஷஸித்தா: யதா பஸ்மஜாபாலே. “லிங்கரூபிணம் ஸாம்பம் ஸம்பூஜ்ய விஜயந்தி யோகிநஸ்ஸித்தாஸ்ஸம்யக் யஜந்தி யஜ்ஞேந மாமேவ ஸர்வம் தீக்ஷிதாஸ்ஸாங்கவேதாஸ்ஸர்வோபநிஷதஸ்ஸேதிஹாஸா நமேதாந்யதஹமேவ ஸர்வம் மய்யேவ ஸ்திதம் தஸ்மாத் காஶ்யாம் ப்ரஜ்யமேதாஹோராத்ரம் ஸம்பூஜ்ய: தத்ர மஹாபயாநநா. நாநாநநா நாநாநகா நாநாஸ்த்ரபாணயோ நாநாரூபதரா நாநாசிஹ்நிதா ஸர்வே விபூதிதாரிணோ ருத்ராக்ஷாபரணா: க்ருதாஞ்ஜலயோ நித்யமபித்யாயந்தி. தத்ர பூர்வஸ்யாம் திஶி ப்ரஹ்மா க்ருதாஞ்ஜலிரஹர்நிஶம் மாமுபாஸ்தே தக்ஷிணஸ்யாம் திஶி விஷ்ணு: க்ருதாஞ்ஜலிஶ்ஶிரஸா உபாஸ்தே ப்ரதீச்யாமிந்த்ரஸ்ஸப்ரணாமமுபாஸ்தே உதீச்யாமக்நிரூபீ ருத்ரோ மாமுபாஸ்தே”. இதி ஸமஸ்தஸ்ய ஶைவநாம் அதேஶ்வராத் தக்ஷிணாயாம் திஶி விஷ்ணோ: ப்ரணாமாத் ப்ராப்தோ விஷ்ணுர் நாமாதீ ஸம்ஸ்கரோபாஸகத்வேந விஷ்ணோர்லிங்கபூஜாயாம் தத்ஸ்வபாவஸாமர்த்ய தர்ஶிதம், ருத்ராக்ஷதாரணம் ஸாம்பஸ்வரூபத்வம் ஸர்வாதிவாசகோ தத்த்வம் ஸர்வம்। “தக்ஷிணஸ்யாம் திஶி விஷ்ணுஸ்ஸாக்ஷாந்நம்ஸ்க்ருத்ய க்ருதாஞ்ஜலிபுடஸ்ஸம்ஜ்ஞிதம், தத்ராப்ரணம்ய வாயுகாஸாயத்யா ப்ராவாவ ஸாத்க:. தத்ர ஜக்ஷயஸ்பாம்ஸவா:, வாஸவதா:, ஸோமேஶ்வா: வேதாவத ஸமேஶவம்பம்வாக்ஷரஜவஞ்: தாரகம்ஸ ப்ரணவப்ரயோதாநாஸ்திஷ்டந்தி. இத்யுபேதவ்யமேநஸ்வீக்ருதம். ஸ்வாஷ்யஸ்ய தேவப்ரஹ்மஹாஸாதாமஹதாயாம் ஸூதஸம்ஹிதாயாம். யதா “ஶிவேந விஷ்ணுநா சைவ ப்ரஹ்மணா வஜ்ரிணா ததா। தேவதாபிஶ்ச ஸர்வாபி: த்ருதம் பஸ்ம த்ரிபுண்ட்ரகம்। தேவஸ்த்ரீபிஶ்ச ஸர்வாபிர்த்ருதம் பஸ்ம த்ரிபுண்ட்ரகம்। ப்ராஹ்மணை: க்ஷத்ரியைர்வைஶ்யை: ஶூத்ரைரபி ச ஸங்கரை:। தத்வாவிஶேஷாத் யாதிரப்ரஹ்மஶ்ருதிகாரணயோர்வப்ரஹ்மேதமயாகிம்யதக்ஷா விஶ்வேதா. பரம்ப்ராம்தாரணாயதேஹமவதாய க்ஷீரணஸ்ய: ஶ்ரீஶிவாநாராயணே. ஶ்ரீஶேதாஶாஸர யேக்ஷிவ ஶிவகேஶகம் விஸவமப்ரவிஷாரயாஶஸ்தீர் திம் “யுத்தகாண்டே” ஸக்ருத்யாகாயா நயஶிவாவரம் வீக்ஷ்யஷாஜி நயாரஸவொயுஜநவிக்ரஹம்। ஸுஷோநிஶீக்ஷ்யவநஶேஷ்யஸாயா நம்கிதிதிஸதங்காம்க்ஷீ வஷேதிதம்நநிஸ்திநம்ஹே ஶ்ரீராமஸவோஷ்யாவகிஷசிவ- “ஸோமாரமாவஜ்ர” ஶம்த்ராயுராப்ரஸ்தாமே தஸ்யஹஸ்பாரணம் தயாஶ்ரீ ஶத்ருக்நாதாராயணே-ஶமுண

நனர்- தென்திக்கில் விஷ்ணுவானவர் சிரசில் அஞ்சலி கூப்பினவராகவே யுபாசித்துக்கொண்டிருக்கின்றனர் மேற்றிசையில் இந்திரன் வணக்கத்துடனுபாசித்துக் கொண்டிருக்கின்றனன்- வடதிக்கில் அக்கினி வடிவத்தையுடைய வுருத்திரர் என்னை யுபாசித்துக்கொண்டிருக்கின்றனர்- என்று பரமசிவன் அருளிச்செய்ததாக வெளிபட்டது. இதனால், காசியில் தென்திசையிலிருந்துகொண்டு சிரசில் அஞ்சலிசெய்தலிற் றவிராதவராகி யிலிங்கபூசையால் சிவோபாசனையிற் றவிராதவராகிய விஷ்ணுமூர்த்திக்கு, விபூதிருத்திராக்ஷதாரணம், பரமசாம்பத்துவம், முதலான சகல முக்கிய சைவ தர்மங்களுஞ் சித்தித்திருக்கின்றன. அவ்வுண்மை,

தக்ஷிணஸ்யாம் திஶி விஷ்ணுஸ்ஸாக்ஷாந்நம்ஸ்க்ருத்ய புஷ்பாஞ்ஜலிபுடஸம்ஜ்ஞிதம் ததா நேத்ரமண்டலவாயுகாஸாயமாயா: வாவவா தகா: ஷஷ்யஸ்ய ஸவா: வாஸவ தாஸோமேஶ்வா வேதாவத ஸம்மேஶவம்பம்வாக்ஷரம் ஜபந்த தாரகம் ஸப்ரணவம் ஶோதாநாஸ்திஷ்டந்தி, என்ற ச்ருதி தொடக்கத்தால் விளங்கின

இந்தச் சுருதிக்கு உபப்பிரம்மணமாக, ஸ்காந்தாந்தர்க்கத ஸூதஸங்ஹிதாவசனம் வருமாறு.

ஶிவேந விஷ்ணுநா சைவ ப்ரஹ்மணா வஜ்ரிணா ததா। தேவதாபிஶ்ச ஸர்வாபிர்த்ருதம் பஸ்ம த்ரிபுண்ட்ரகம்। தேவஸ்த்ரீபிஶ்ச ஸர்வாபிர்த்ருதம் பஸ்ம த்ரிபுண்ட்ரகம்। ப்ராஹ்மணை: க்ஷத்ரியைர்வைஶ்யை: ஶூத்ரைரபி ச ஸங்கரை:।

என்பதாதி வாக்கியங்களால், திரிமூர்த்திகள் அவரது தேவிமார், இந்திராதிதேவர்கள் அவரது ஸ்திரீகள், பிராம்மணாதிசர்வஜாதியர்கள், வித்துவான்கள், முநிசிரேஷ்டர்களாதி யாவருக்கும் சைவதர்மங் கூறுகின்றன. இத்தியாதி வேதோபப் பிரமாணங்கள் பலவாலும், சிவபிரான் விஷ்ணு முதலிய எல்லாத்தேவர்களுக்கும் பஸ்மதாரணங் கூறப்படுகின்றன. விஷ்ணுவுக்கு பஸ்மதாரணங் கூறப்பட்டபடியே, வேதத்தி லெங்காவது மற்றைய எவ்வித அடையாளமாவது கேட்கப்படுகிறதா?

இராமாயணத்தி லெங்காவது தாசரதிக்கு இப்புண்டரம் விதித்திருக்கின்றதா? ஸ்ரீராமனது கோலத்தை விசாரிப்போம் யுத்தகாண்டே ஸக்ருத்யாகாயா நயஶிவாவரம்। வீக்ஷ்யஷாஜி நயாரஸவொயுஜநவிக்ரஹம்॥ என்னுங் வசனத்தைக்கண்டு “நன்மைவிரும்பி,, யென்பவர் எவ்வகை சமாதான முரைப்பரோ அறியேம்! ஸ்ரீராமரகசியோபநிடதத்தில் “ஸோமாரமாவஜ்ர” சோமராமச்சந்திரம் என்கிற மந்திரத்தை உபநியாசம் செய்யுங்கால் ஸ்ரீராமனுக்கு பஸ்மத்திரிபுண்டரம் சொல்லியதும், அத்தியாத்மராமாயணத்தில் சூர்ப்பநகை ஸ்ரீராமனைப் பார்க்குமிடத்திலும் “தத்ருஷ்வா ராமநாயா” அங்கு இலக்ஷ்மிநாதனைக்கண்டு என்று தொடங்கி ஸ்வர்ணஜடாஹாரம்ஸாக்ஷாத்ருத்ரஶிவாவரம்। ஸவோஸஜநிதவஸ்ரம் ஶம்த்ருஷ்டாகாரவேஶம்மதா.

[illegible]

[illegible]

பொற்கொடிகள்போன்ற சடைகளைப்பூண்டு திருநீறணிந்த திருமாலது திருக்கோலத்தை ஸ்ரீபரசிவத்திற்கொப்பாய்க் கூறியதும் "[illegible]" என்று மகாவீரசரிதம் முதலிய காவியங்களில் பவபூதிமுதலிய கவிகள் வர்ணித்தும், ஸ்ரீகிருஷ்ணபகவான் உபமன்னியமகாமுனிவரிடம் சைவோபதேசம் பெற்றதாய் மாபாரதத்திலுள்ளதும் இவர் படித்தறியார்போலும். அந்தோ! அந்தோ!! கைவல்லியம், ஜாபாலம், காலாக்கினிருத்திரம், முதலிய வேதோபநிஷத்துகளாலும், எல்லா இதிகாச புராண தர்மசாஸ்திரங்களாலும், எல்லாத்தேவரிஷிகணங்களுக்கும் விபூதிருத்திராக்ஷதாரணமே விதிக்கப்படிருக்கிற வுண்மை தெரியாமலும், இப்போது நாம் எடுத்துக்காட்டிய வேதோபப்பிரமாணங்களால், சாக்ஷாத்விஷ்ணுவுக்கும் இராமகிருஷ்ணாதி யவதாரவிஷ்ணுக்களுக்கும் பஸ்மருத்திராக்ஷமே தாரணப்பொருளானதை அறியாமலும், தமக்கநுகூலமாகிய கற்பனைமொழிகளைக்கைபிடித்து பஸ்மதாரணத்தை நிந்தித்ததும் தவிர, அவைகள் விப்ரமாக வைதிகநெறிக்குக்கூடாவெனவும், பிரம்மக்கியானிகளுக்கற்றதெனவும், பதிதருத்திரர்களுக்குற்றதெனவும், என்று சகலகலாவல்லவராகிய தன்மைவிருப்பி கைகூசாது வரைந்துவிட்டாரன்றோ. அரிஹரி! விஷ்ணுவாதி சகல தேவரிஷிகணங்களையும், இப்போது உலகில் விளங்கும் எல்லாவித வைதிகசீலர்களையும் அஞ்ஞானிகளாகவும், பதிதருத்திரர்போன்றவர்களாகவும் ஆக்கிவிடுதற்குத்துணிந்ததை நினைக்க நெஞ்சந் திடுக்கிடுகின்றதே! இவருடன் போராடி இப்பொழுது நாம் உள்மதங்களிற் சண்டைசெய்வது உசிதமன்றாயினும் வைதிகசீலர் சந்தோஷிக்கும்பொருட்டு அவர் மனக்கொதிப்படக்க இவ்விடம் சிறிது வரைந்தாம்.

இன்னும் வரும்.

ஓர் வைணவன்.

பிரம்ஹஸமாஜம்.

இவ்வுலகின் கண்ணுள்ள சகல பாஷைகளுக்கும் மூலாதாரமாகியும் பொதுவாகியும், தேவபாஷையுமாகிய ஸம்ஸ்கிருதபாஷையிலிருந்து "பிரம்ஹஸமாஜம்,, என்ற வாக்கியத்தை எடுத்துக்கொள்ளப்பட்டது- அவ்வாக்கியத்திற்கு தாத்பரியமாவது. பிரபஞ்சத்திற்கு ஆதாரமான தெதுவோ அதை அனுஷ்டிக்கும் சபையென்று சொல்லப்படும். பூர்வம் ஸ்ரீவியாஸாசாரியஸ்வாமிகள் முதலான மகாரிஷிகளால் கண்டு வெளியிட்ட வேதங்களில் பிரபஞ்சத்திற்கு ஆதாரமாகிய பெரிய பொருளுக்கு பரப்பிரம்ஹமென்றழைக்கப்பட்ட சொல்லில்லாமலில்லை- மேலும் மஹரிஷிகள் பிரம்ஹத்தில் காரணகாரியங்களை அறிந்து, சதாபிரம்ஹாநந்த நிஷ்டாளாகவே யிருந்து கடைத்தேறினார்கள். இதொன்றே சத்தியமான மார்க்கமென்று ஸ்ரீமத் சங்கராசாரியஸ்வாமிகள் முதலான மகான்கள் தாங்கள் வெளியிட்ட நூல்களின் வாயிலாய் முறையிட்டிருக்கிறார்கள். சிலகாலமாக சைவம் வைணவம் முதலியவும், கேற்றுப்புறப்பட்ட கிறிஸ்து, முகமது, முதலியவும் இதுவும் போதாமல் பலபல புன்மதங்கள் ஒன்றின்பின் ஒன்றாகத்தோன்றி என் மதம் பெரியது, என்மதம் சிறியது, உன்தேவதைக்குக் கண்ணில்லை என்தெய்வத்துக்கு எழுபதிருபிரங்கண்ணென்று அறிவின்மைமேலிட மதப்பித்துண்டாகி அதனால் பேதாபேதங்கண்மலிந்து ஸ்வரூபத்தை மறந்து கேவலம் அநதிகாரிகளான பிராந்தர்களாய் எரிவாய் நிரயத்துக்கிரையாகி வருகிறார்கள் அந்தோ பரிதாபம். ஆனால் ஸ்ரீவியாஸாசாரியார், ஸ்ரீசங்கராசாரியார், இராமானுஜாசாரியார், ஆநந்ததீர்த்தாசாரியார் முதலியவர்கள் பலவிதமான தாத்பரியங்களைக்கொண்டும் பலவிதமான அதிகாரிகளைக்குறித்தும் பலவிதமான மதங்களை ஸ்தாபனம் செய்திருந்தபோதிலும் அவர்களுடைய பரமாந்தரங்கம் பிரம்ஹ ஸம்மேளனத்துக்குட்பட்டதாகவே இருந்ததென்பது அவர்களால் வெளியிடப்பட்ட நூல்களே சான்றாகும்- மேலும், மதபேதங்கள் உள்ளவிடத்தில் கடவுளுடைய லக்ஷணத்தைப்பேதமாக்க நேரிப்படுதலால், அம்மதங்களை வழிபடும் மாந்தர்களும் சத்குணங்களைக் கைவிட்டு பாழ்படைகிறார்கள். அதனால் சர்வவியாபியாயுள்ள ஈஸ்வரனுடைய அகடிதகடனாசாமர்த்தியத்தைப் பற்றிச் சந்தியற்றவர்களாய் நாஸ்திகத்தை யடைபவர்களாகின்றார்கள் ஆகையால் நாம் ஒவ்வொருவரும் மதபேதங்களை விட்டொழிதல்வேண்டும். அப்பொழுது நாம் அஞ்ஞானக்கடலைகடந்த முத்தர்களாவோம். சிலர் பிரம்ஹசமாஜம் நூதனமென்று வாய்க்கடங்காத வம்புகளை விரிக்கிறார்கள்- அது முற்றும் தவறு. நூதனமாகில் பிரம்ஹமென்கிற பதார்த்தமும் சொல்லும் நூதனமா? அல்லது சமாஜம் என்கிறசொல் நூதனமா? இவ்விரு சொற்களும் புராதனமாகவிருப்பதால் நூதனமென்பது சத்விசாரணை பற்றவர்களும் கல்விபற்றவர்களும் சொல்லும் வார்த்தையேயாம். சான்றோரவையின்கண் சென்று நிரவிசாரிமாத குற்றத்தினாலன்றோ இக்குறைவாசகம் கூறநேரிட்டது- இவ்விஷயத்தை நன்றாகப் பரிசீலனைசெய்தவர்களாகிய இராஜா இராமமோகனராயரும், தேவேந்திரநாதடாகூரும், கேசவசந்திரசேனரும், இந்த சமாஜத்தின் பெருமைகளை பற்றி அநேக நூல்களை பெங்காளதேசத்தில் பிரசுரப்படுத்தியிருக்கிறார்கள். அந்நூலைப் படித்துத்தேர்ந்த எவரும் அந்நியமதங்களில் சேரமாட்டார்களென்று நாம் திண்ணமாய் நினைக்கக்கூடும். ஆனதால் பிரம்ஹசமாஜத்தின் குணங்களையறியாது அச்சமாஜத்தின்பேரில் ஆதியிற் சிலர் பழிகூறினாலும் அவர்களே அநுபவத்தில் அதைச் சிறப்பித்துக்கூறி பிரம்ஹானந்த கைவல்யத்தை அடைவார்களென்பதில் எவ்வளவும் சந்தேகமில்லை- நண்பர்களே, அச்சமாஜத்தார்கூறிய சில சித்தாந்தத்தைச் சமயம்வந்துழி இப்பத்திரிகைவாயிலாய்ப் பேசிவருவோம்.

இன்னும் வரும்.

பிரம்ஹஸமாஜநேசன்.

[illegible]

குறிப்பு-

பிரம்ஹஸமாஜம் இதுவிஷயத்தில் பற்பல ஆக்ஷேபங்கள் பலர் செய்யவேண்டியதுண்டு- இப்பிரம்ஹஸமாஜநேசர் எழுதியபடி பிரம என்கிறபதமும் ஸமாஜம் என்கிறபதமும் அநாதியானதாயினும் பிரம்ஹஸமாஜம் என்பது புதியதே- எவ்விதமெனில் உலகத்தில் மலடிமகன் உண்டா எனில் இல்லையென்றே மறுமொழி யளிக்கவேண்டியது- அவ்வழிவிட்டு மலடி என்கிறபதம் புதியதா? மகன் என்கிறபதம் புதியதா? என்று ஓர் கேள்வியைக்கேட்டு உடனே இவ்விரண்டு சொற்களும் அநாதியாதலால் அம்மலடிமகன் அநாதியிலுள்ளவனே எனக்கூறும் மறுமொழி எங்ஙனமொவ்வும்- அதுபோல் நமது நண்பர் பதம் அநாதியாதலால் இது அநாதியென்றெழுதியது முற்றிலும் பொருத்தமுள்ளதாய் சம்பந்தக்கதன்று- ஆதல்கொண்டு இனி இவ்விதம் எழுதாது தக்க காரணங்களால் இவர் சமாஜத்தின் கொள்கைகளைப்பற்றி எழுதுவாரேல் உசிதமென்றாவது அல்லவென்றாவது நாம் தோன்றிய விஷயம் எழுதக்கூடும்-

[illegible]

[illegible]

[illegible]

[க] [illegible]

[உ] [illegible]

[ந] [illegible]

[ச] [illegible]

[ரு] [illegible]

[சா] [illegible]

[எ] [illegible]

ஹிந்து சபை.

மற்ற எதுவிதமான ஆசார சித்தாந்த விரோதங்களிருந்தாலும் அடியிற்கண்ட ஏழு சுலோகங்களுக்குக் கட்டுப்பட்டு கிரந்த பரிசோதனையும், விவகாரங்களும் செய்கிறவர்களைமாத்திரம் ஹிந்துக்களாகவும், அப்படிப்பட்ட ஹிந்துக்கள் எங்கே எந்த விடயமாய்ச் சேர்ந்தாலும் அவர்களை அந்தந்த ஹிந்துசபையாகவும், எல்லா ஹிந்துசபைகளிலும் பிரதானிகள் சேர்ந்தால் ஹிந்துசபைப் பொதுக்கமிட்டியாகவும் நாம் ஏற்படுத்திவருகிறோம். அந்தந்தச் சபைகளுடைய பெயர் விவரங்களைத் தெரியப்படுத்தினால், பொதுக் கமிட்டியார் சேரவேண்டிய காலம் இடம் நிச்சயித்தறிவிக்க சந்தோஷமாயிருக்கும். முதலில் கமிட்டியார் அடுத்த டிசம்பர்மீ 11-உ ஞாயிற்றுக்கிழமை ஈரோட்டில் சேரக் கோருகிறேன்.

இங்ஙனம்
அ. சங்கரய்யர்.
ஹிந்துசபாஸ்தாபகர்.

வசனம்.

க. பிரம்ம க்ஷத்திர வைசிய சூத்திர இந்நான்கு வருணங்களும், பூமி, அந்தரிட்சம், சுவர்க்கம் இம்மூன்று உலகங்களும், பிரம்மசரியம், கார்கஸ்தியம், வானப்பிரஸ்தம், சந்நியாசம் இந்நான்கு ஆச்சிரமங்களும், இறந்த நிகள் வரும் இம்மூன்றுகாலங்களும எல்லாம் வேதத்தால் சித்திக்கப்பட்டதுகள்.

உ. எல்லாருடையவும் விரத்தி உபாயங்களை கிரமம்போல் அந்தணர் தெரிந்துகொண்டு, அன்னியர்களுக்கு உபதேசித்து தாமும் அப்படியே நடக்கக்கடவர்.

ங. தாங்கள் இன்ன சாதிக்காரரென்றுள்ள பெயரமைாத்திரம்கொண்டு விரதம், மந்திரம், ஆசாரணை இல்லாத அநேகர்கள் சேர்ந்தாலும் அவர்களால் அதிகாரமுள்ள ஓர் சபை ஆகமாட்டாது.

ச. ஆசாரியர்களால் சம்மதிக்கப்பட்ட புத்தியுள்ள பெரியோர்களைக் கேட்காமல் வாநரசாபல்லியத்தால் ஓ சாந்தமுள்ளவாநரனே! என்னைக்குறித்து என்னசொல்ல நினைக்கிறாய்? இதனால், பெரியோர்கள் வாக்கியத்தால் தர்மத்தை நிர்ணயம் செய்யவேண்டும் என்று துணியப்பட்டது.

ரு. ஓ வாநரா! சத்துக்களுடைய தர்மமானது வெகு சூக்ஷ்மம். எளிதிலறியமுடியாது. எல்லாப் பூதங்களுடைய இருதயத்திலுமிராநின்ற ஆத்மாவே சுபாசுபத்தை அறிவர். இதனால், எப்பொழுதும் ஆத்திகம் வேண்டுமென்பது வெளிப்பட்டது.

சா. ஜலரூபமானவெல்லாம் தீர்த்தங்களும், மண் கல் முதலான ரூபமுடையனவெல்லாம் தேவர்களும் அல்ல. நீடித்தகாலத்தால் அவர்கள் பரிசுத்தம்பண்ணுவார்களானாலும் சாதுக்களோ கண்டமாத்திரத்தால் பரிசுத்தப்படுத்துவார்கள். இதனால் அவர்களை நம்புக.

எ. தனது சரீரத்தில் ஒளியாயும், எல்லாவற்றிற்கும் சாட்சியாயும் இருக்கிற தன்மயத்தைப் பாபமற்றவர்கள்தானே பார்ப்பார்களேயன்றி மோகத்தோடுகூடி மற்றவர்கள் காணமாட்டார்கள். அதுகொண்டு அவ்விதம் வழிபடுக.

𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌵𑌿𑌦𑍍𑌯𑌾.

ப்ரம்மவித்தியாபத்திரிகை

பிரதி இங்கிலீஷ்மீ ௩௰உ சிதம்பரத்திலிருந்து பிரசுரம் செய்யப்படும்

புஸ்தகம்—க]   கஅஅஎ௵ ஏப்ரல்மீ ௩௰உ   [இலக்கம். ௰க

[illegible]

[illegible]

உபந்நியாசம்.

[முன்தொடர்ச்சி.]

முதற்காலத்து ஆரியர்களும் மற்றவர்களும் வேறுபட்டகாரணம் மந்திரப்பிராமணங்களில் நன்குவிளங்கும். பயிர்த்தொழில், கால்நடைகாத்தல் முதலிய தொழில்களை ஆதியில் எல்லோரும் கைக்கொண்டது. அதுகொண்டே வைசியர் என்னும் மூன்றாம்வருணத்தவருக்கு ப்பெயரான [விஶ:] என்குறபதம் மனிதர்கள் அனைவருக்கும் பொதுப்பெயராகவும் வழங்கிவருகின்றது. பின்னற், காலஞ்செல்லஇவர்களுக்கு த்தொழில்விஷயத்தில்வந்த ஓர்கலகத்தினால், அவர்களை சமாதானப்படுத்த எத்தனம்செய்தசிலபலசாலிகள், முன் தாம்கொண்ட தொழிலைவிட்டு வேறுபட்டுசண்டைக்காரத்தொழிலைக் கொண்டனர். அவர்களுட்சிறந்தவரே வேதங்களில் அரசரெனப்படுவேர். இதுகொண்டே [விஶாம்பதி:] என்று அரசர்களை வழங்குவது. காலஞ்சென்ற பார்சிபாஷையில் “விஸ்பதி” என்றும் இக்காலத்து லாட்டின்பாஷையில் “வெஸ்திஸ” என்றும். இதேபதம் அரசர்களைக்குறிக்கும்தன்மையுளதாயிருக்கின்றது. இவ்விதம் க்ஷத்திரியரும்வேறுபட்டபிறகு, தேவதாபராதத்தால் உலகத்தில் மழை முதலியவை சரியாய்ப்பெய்யாமல் போனபொழுது, அத்தேவதைகளைப் பூசிக்கவேண்டியது அவசியமாயிற்று. இவ்விந்துதேசம்போல் மற்றுள்ள எந்ததேசத்திலும் இவ்விதம் தேவதாபக்திவிசுவாசங்கள் கிடைப்பதரிது. ஆரோக்கியம், ஐசுவரியம், புத்திரன், மித்திரன், பசுக்கள் முதலிய எல்லாவிஷயங்களும் தேவதாப்பிரசாதத்தால் கிடைப்பதாய் நமது இந்துக்களுக்கு நம்பிக்கையுண்டு. இதுவிஷயம் அனேகத்தைப்பிரார்த்திப்பதில் வினியோகிக்கப்படும் வேதமந்திரங்களால் ஊகிக்கலாம். தேவதைகளின் பிரசாதத்தாலன்றி சத்துருஜயமில்லை. அப்பிரசாதத்தாலே தான் பயிர்விருத்தி. எல்லாம் தேவதாகிருபையால்முடியும். அத்தேவதைகளைப் பிரார்த்தித்தால் அவர்கள்சகாயம் செய்வாரென்பது அவரது கருத்து. இது, வேதங்களில்விளங்கும் “ [illegible] ” இதுபோன்றமந்திரங்களால் ரிஷிகளின் கருத்துவிளங்கும் இவ்விதஅபிப்பிராயம் எங்கும் பரவுகுறதற்கு முன்னமே வேதங்களைகற்றபுரோகிதர்கள்